# திருமலைத்தீபம்
# Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 06

விலை 20/=

ஆடி இதழ்-2014 , ஆரம்பம் 15மாசி-2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்-06.


E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532




## ஆயர்களின் ஐந்து வருட ஒன்றுகூடல்

ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கொருமுறை ஆயர்கள் எல்லோரும் திருத்தந்தையை சந்திப்பார்கள் இது 'Adlimina Visit' என அழைக்கப்படும். இங்கே நமது மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருத்தந்தையுடன் உரையாடுகின்றார்.

## மறைமாவட்ட மேய்ப்புப்பணிச்சபை மகாநாடு 2014

எமது மறைமாவட்ட மேய்ப்புப்பணிச்சபையின் இரண்டாவது மகாநாடு மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி.S.S.ஜோன்பிள்ளை அவர்களின் வழிநடத்தலில் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

அருட்பணி பாலசிங்கம் ஜெயபாலன் அ.ம.தி அவர்கள் "மனித மாண்பும் குடும்பமும்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

உரையினைத் தொடர்ந்து குழுநிலை ஆய்வுகள் இடம் பெற்று கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஈற்றில் எதிர்கால செயல் திட்டங்கள் பற்றிய உரையாடலோடும் ஆயரின் இறுதி ஆசீருடனும் மகாநாடு இனிதே நிறைவேறியது.






## சிறிய குருமட அதிபரின் உரோமைப்பயணம்

சர்வதேச பயிற்சிப் பாசறைக்காக முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் சிறிய குருமட அதிபர் அருட்பணி.செ.சுகுணேந்திரன் குரூஸ் அவர்கள் இத்தாலி உரோம் நகருக்குப் பயணமாகிறார். இப் பாசறை குருத்துவ உருவாக்கலில் ஈடுபட்டிருக்கும் குருமட அதிபர்கள் ஆன்மீக குருக்கள் மற்றும் குருமடத்தில் பணியாற்றும் அனைத்து குருக்களுக்குமானதாகும்.



இடம் : இத்தாலி உரோம் நகரம்.

காலம் : 04.07.2014 முதல் 31.07.2014 வரை நடைபெறும்.

இவருக்காக செபிப்போம் வாழ்த்துவோம்.

## இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்ற தேசிய விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையம் நடாத்திய 2ம் வத்திக்கான் சங்க ஒளியில் பொதுநிலையினரின் எழுச்சிமிகு ஈடுபாடு ஆழ அகலப் பயிற்சியின் 2014ம் ஆண்டு நடைபெற்ற பயிற்சிகளில் இலங்கையின் திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து கலந்து கொண்டோர் .

### 2014 ஜனவரி 26 முதல் பெப்ரவரி 01ம் திகதி வரை



1. திரு.ஜே.எம்.ஆர்.ரொபின் கெனடி - பேராலயப் பங்கு
2. செல்வி.கத்தரின் மரியா.ஜொனத்தன் - சாம்பல் தீவு பங்கு
3. செல்வி.தேவதாஸ்.பிரின்சி - நிலாவெளி(கும்புறுபிட்டி)பங்கு
4. செல்வி.ஜெ.கிறுசாந்தா.குரூஸ் - திருமறைக்கல்வி நடு நிலையம்

### ஏப்பிரல் 26 முதல் மே 2ம் திகதி வரை



1. திருமதி ஜெஸ்மின் பிரிடா.நூட் - உவர்மலைப் பங்கு
2. திரு.ஏ.ஜெயகுமார் - பாலையூற்றுப் பங்கு
3. திரு.எம்.ஜோய் - நிலாவெளி
4. செல்வி.எ.டிலானி - குவாடலூப்பே (செல்வநாயகபுரம்)
5. செல்வன் நாதன்.சுரேஸ் - மூதூர்பங்கு

### 2014 மே 13 முதல் மே 20ம் திகதி வரை

ஆங்கிலத்தில் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர் கல்வி தொடர்பாடல் பயிற்சியில் கலந்து கொண்ட கத்தோலிக்க ஆசிரியர்கள்



1. திருமதி.நி.சிந்தியா - தி/சென்ற் மேரிஸ் கல்லூரி
2. திருமதி.எஸ்.அருள்தாஸ் - தி/சென்ற் மேரிஸ் கல்லூரி
3. திரு.எஸ்.வின்சன் - தி/தூய சூசையப்பர் கல்லூரி
4. செல்வி சன்றா குரூஸ் - தி/திரு இருதயவித்தியாலயம், இருதயபுரம்

## குருத்துவ பணி வாழ்வில் வெள்ளிவிழா நாயகர்கள்

### இவர்கள் பணி வாழ்வு மேலும் மேலும் வளர செபிப்போம்



14.03.2014

அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்கா



14.03.2014

அருட்பணி F.X.டயஸ்



03.06.2014

அருட்பணி லக்ஸ்மன் பீரிஸ் இ.ச

### அமலமரித்தியாகிகளின் உயர் தலைவர் அருட்பணி லூயிஸ் லோகன் அ.ம.தி முதன்முறையாக இலங்கைக்குவிஜயம்



எமது மறைமாவட்ட ஆயருடன் சந்தித்து உரையாடுகின்றார்

அன்பே உங்கள் வாழ்வுக்கு அடிப்படையும் ஆணிவேருமாய் அமைவதாக (எபே 4: 17)

Digitized by Noolaham Foundation.

## உங்களோடு பேசுகிறேன்...

வாசகர்களே திருமலைத்தீபத்தினூடாக முதன் முறையாக செய்திகளைப் பகிர்ந்து கொள்வதற்கு எனக்கு ஒருவாய்ப்பு. சிறிது இடைவெளி ஏற்பட்டாலும் தொடர்ந்தும் தீபஒளி சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பது உங்கள் ஆதரவுடன் நான் கூறும் உறுதி

இம்மாதத்திலே பலமறவாத நிலைகளை நினைவு கூருகின்றோம். குறிப்பாக **உலக சமூகத் தொடர்பு தினம்** கொண்டாடப்படுகின்றது. சமூகத் தொடர்பின் பணிகள் பாரியது பரந்தது என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். அதேவேளை இம் மாதத்திலே குருத்துவப் பணியிலே **சுதேச குருக்கள் தினமும் இயேசுசபை விழாவும்** நினைவு கூர்ந்து கொண்டாடப்படுகின்றது. இதேவேளை **அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபையினரும்** தங்கள் விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.அனைவருக்கும் ஆசிருடன் கூடிய நல் வாழ்த்துக்கள். இன்னுமொன்றை மறந்துவிட முடியாது ஏனென்றால் மறையாமல் இன்னும் இருப்பது வேதனைகளின் வடிவங்களைக் காட்டிக் கொண்டிருக்கும் அகதிகள். சர்வதேச அகதிகள் தினம். நமது நாட்டில் மட்டுமல்ல உலகின் பல பகுதிகளிலும் சிதறிக்கிடந்து, சின்னாபின்னப்பட்டு, வேதனைகளை நினைவு கூரும் தினமாக இத்தினத்தை நாம் நினைவு கூரலாம்.

ஜீலை என்கின்ற போது இன்னுமொன்றை நாம் மறந்து விடமுடியாது அதுதான் ஜீலைக் கலவரம். எத்தனையோ உயிர்களை காவுகொண்ட கலவரம். ஈடு செய்ய முடியாதெனினும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு இறைவனை வேண்டுவோம். இனி இவ்வருடத்தின் தொனிப் பொருளாக **"மனித மாண்பும் குடும்பமும்"** துலங்குகின்றது. மனிதத்தின் உருவாக்கல் மையம் குடும்பமே. விதைக்கும் போது விதைகள் சரியாக விதைக்கப்பட்டால் அவை விளையும் போது சரியான விளைவையே தரும். இன்னும் மரங்களைக் கொண்டே கனிகளை அறியலாம் என்பார்கள். ஆகவே அனைத்து நிலைகளையும் பார்க்கும் போது உருவாக்கம் என்பது பிரதானமானதாகும். பொதுவாக உருவாக்கலின் போது பெற்றோர் ஆசிரியர் பெரியவர்களின் பங்களிப்பு மேலானதாகும்.

இவைகளைப் பொறுப்பானவர்கள் உணர்ந்து கொள்வதோடு எதிர் காலத்திலே வளங்களைக் காண, வெற்றி நிலைகளை அடைய நிகழ்காலத்திலே செயலாற்றிக் காட்ட வேண்டுமென்பதை மறந்துவிடக் கூடாது.

சென்ற மாதத்திலே தூய ஆவியானவரின் பெருவிழாவை கொண்டாடினோம். அது முடிந்துவிட்ட விழாவெனத் தள்ளி ஒதுக்கிவிட முடியாது. நாம் நல்லதைச் சிந்திப்பதற்கும்,நல்லதை பேசுவதற்கும், நல்லதைச் செயற்பாடாக்கவும், நல்லுறவைப் பேணவும் வளர்க்கவும் என்றுமே துணையாளர் நம்மோடு இருந்து செயலாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன் மீண்டும் பேசுவேன்.

**அருட்பணி N.C அருள்வரதன்**



## இறந்த பின்னர் மீண்டும் உயிர்பெற்ற அருட்தந்தை

அருட்பணி மனியங்கெட் அடிகளார் 1949ம் ஆண்டு இந்தியாவில் பிறந்தார். இவரது பெற்றோர் ஜோசப் - திரேசா தம்பதிகளாவர். ஏழு பிள்ளைகளைக் கொண்ட இக்குடும்பத்தில் மேற்படி குருவானவர் மூத்தவராவார். தனது 14வது வயதில் குருமடத்தில் இணைந்த இவர் 1975 தை 1ம் நாள் குருப்பட்டம் பெற்றார். இந்தியாவில் பல பிராந்தியங்களில் பணியாற்றிய இவர் பின்னர் ஐக்கிய அமெரிக்கா இராச்சியத்தில் 27 ஆண்டுகள் இறை பணியாற்றினார். தற்போது புளோரிடா நகரில் தூய கத்தரின் ஆலயத்தில் மறைபணியாற்றுகிறார். அங்கு மரியாயின் சேனை மறைக்கோட்ட இயக்குனரும் இவரே.

**அருட்பணி மனியங்கெட் அடிகளார் :** 1985ம் ஆண்டு சித்திரை 14ம் நாள், இறை இரக்க ஞாயிறன்று திருப்பலி நிறைவேற்றுவதற்காக (வட) கேரளாவிற்குப் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஒரு கோர விபத்துக்குள்ளானார். எதிர் புறத்தில் போதை வெறியுடன் வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்தார் சாரதி. குருவானவரின் இயங்கு மிதி வண்டியுடன் (motor - bike) அந்த வாகனம் நேருக்கு நேர் மோதியதால் மிகவும் கடுமையாகக் காயமுற்ற குருவானவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அதன் பின்னரான அவரது அனுபவங்களை அவர் தமது இணைய தளத்தில் கீழ் கண்டவாறு விளக்குகிறார். அதனை அவரது வார்த்தைகளாலேயே பார்ப்போம்.

'கடுமையாக காயமுற்றிருந்த என்னை அந்த பிராந்தியத்திலிருந்து 35 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். அவ்வாறு சென்றுகொண்டிருக்கும்போது,எனது ஆன்மா எனது உடலிலிருந்து பிரிந்து செல்வதையும் மரணம்என்னை நெருங்கிக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன்.

அத்துடன் ஒரு சிறப்பான காட்சியையும் கண்டேன். எனது காவல்தூதர் அங்கு இருந்தார். மனிதர் எனது உடலை வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதைக் கண்டேன். சிலர் அழுதனர். சிலர் செபித்தனர். அவ் வேளையில் எனக்கு அருகிலிருந்த வானதூதர் என்னிடம், என்னை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் அங்கு இறைதந்தை என்னுடன் கதைக்க விரும்புவதாகவும் அவ்வாறு செல்லும்போது நரகம், உத்தரிக்கின்ற ஸ்தலம் ஆகியவற்றையும் எனக்குக் காட்டுவதாக கூறினார்.

**நரகம் :**

வானதூதர் என்னை முதலாவதாக நரகத்திற்குக் கொண்டு சென்றார். அங்கே பயங்கர காட்சியைக் கண்டேன். 2000 பாகையளவில் உள்ள வெப்ப நிலை நெருப்பில் சாத்தான் மற்ற பசாசுகள் இருப்பதைக் கண்டேன். நிறைய மனித ஆன்மாக்கள் அங்கே சண்டை பிடித்துக் கொண்டிருந்தன. அவற்றின் உடல்கள் ஊர்ந்து கொண்டிருக்கும் புழுக்களால் மறைக்கப்பட்டிருந்தன. பசாசுகள் அவற்றை சித்திரவதை செய்தபோது அந்த ஆன்மாக்கள் அடித்தொண்டையால் கூச்சலிட்டனர். வானதூதர் அவர்களைப் பார்த்தபடி என்னிடம், இவர்கள் செய்துள்ள சாவான பாவங்களுக்காகவும் அப் பாவங்களுக்காக மனம் வருந்தாமையினாலுமே இவ்வாறு துன்புறுகின்றனர் என்றார். இந்த நரகத்தில் துன்புறும் வேதனைகள் 7 பிரிவுகளாக இருந்தன. உலகில் வாழும்போது செய்துள்ள சாவான பாவங்களின் வகை, அளவு ஆகியவற்றுக்கேற்ப சித்திரவதை இவ்வாறு நடைபெற்றது. இவ்வான்மாக்கள் மிகவும் பயங்கரமானவையாகவும், பார்ப்பதற்கு மிகவும அவலட்சணமானதாகவும் இருந்தன.

தொடரும்......



## மறைக்கல்வி நிலைய இயக்குனர்களுக்கும் பணியாளர்களுக்குமான ஒன்று கூடல்

☞ தேசிய மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணி இயக்குனர், அருட்பணி பியல் ஜானக்க அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ~ இலங்கையின் மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணி இயக்குனர்களுக்கும் மேற்படி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குமான ஒன்று கூடல், பங்குனி 21,22ம் திகதிகளில் சிலாபம் 'சங்ஹிந்தியாவ' தியான இல்லத்தில் இடம் பெற்றது.

☞ ஒரு சில மறைமாவட்டங்களைத் தவிர மற்ற அனைத்து மறைமாவட்ட இயக்குனர்களும் பணியாளர்களுமாக ஏறக்குறைய 55 பேர் இதில் பங்கு கொண்டனர். 21ம் திகதி பகலுணவுக்கு அனைவரும் சமூகம் தந்தனர். பி.ப 3.30 மணிக்கு செபவழிபாட்டுடன் எமது இந் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தேசிய மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி பியால் ஜானக்க சமூகம் தந்திருந்த அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார். பங்கு பற்றியோர் அனைவரும் தம்மை அறிமுகம் செய்தனர். இவ்விரு நாட்களிலும் வளவாளர்களாக அருட்சகோதரி சாந்தனா (அ.கா), திரு அன்டன் மீமன, திரு சஞ்சீவ விஜேசிங்க ஆகியோர் தமிழிலும் சிங்களத்திலுமாக உரையாற்றினர்.

☞ முரண்பாடுகளை – உறவு விரிசல்களை எவ்வாறு கையாள்வது, கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான வழிகாட்டல்கள் ஆகிய தலைப்புக்களில் உரைகள் நிகழ்த்தப்பட்டன. அருட்சகோதரி சாந்தனா, பல் ஊடக ஒலி ஆற்றுகையைப் பயன்படுத்தி (Power point presentation) தனது உரைகளைத் தெளிவாக விளக்கினார்.

☞ மாலை களியாற்றுகையின்போது (Recreation) பங்கு பற்றியோர் மறைமாவட்ட ரீதியாக தமது ஆடல், பாடல், நடிப்பு மூலம் அனைவரையும் மகிழ்வித்தனர். மட்டக்களப்பு மறைக்கல்வி பணியாளர்களினால் ஊமை (சைகை) நாடகம் நடிக்கப்பட்டு அதற்குப் பெயரிடுமாறு பார்வையாளர்களைப் பணித்து பெயரிட்டவர்களுக்கு 1ம், 2ம், 3ம் பரிசில்களையும் வழங்கினர்.

☞ 22ம் திகதி காலை கத்தோலிக்க கல்வி, கல்வி, விவிலியப்பணி ஆணைக்குழு தலைவர் மேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை வருகை தந்து பங்கு பற்றியவர்களுடன் உரையாடி அவர்களை மகிழ்வித்தார்.

அனைத்து மறைமாவட்டங்களினாலும் அவர்களின் இவ்வருட பணி திட்டங்கள், இதுவரை நிறைவேற்றப்பட்ட பணித்திட்டங்கள் ஆகியன முன்வைக்கப்பட்டன.

☞ தொடர்ந்து ஆயரின் தலைமையில் இயக்குனர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். ஆயர் தமது உரையில் நிலைய பணியாளர்களின் சேவை, அர்ப்பணம் ஆகியவற்றைப் பாராட்டி இத்தகைய ஒன்று கூடல் நிகழ்வுகள் நடைபெறுவது வரவேற்கத்தக்கது என்றும் மற்ற நிலைய பணியாளர்களையறிந்து அவர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்வதற்கு உதவுவதாகவும் கூறினார்.

☞ திருப்பலியின் பின்னர் மதிய உணவைத் தொடர்ந்து இவ்வொன்று கூடல் இனிதே நிறைவு பெற்றது.

☞ உண்மையிலேயே, மறைக்கல்வி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஏனைய மறைக்கல்வி நிலைய பணியாளயர்களை அறிந்து, அறிமுகமாகி, அனுபவங்களைப் பகிர்ந்து, உறவுகளை வளர்த்துக்கொள்வதற்கு இந்த ஒன்று கூடல் வழிசமைத்தது.

☞ பங்கு பற்றிய இயக்குனர்கள், பணியாளர்களைப் பாராட்டுகிறோம். திருமலை, மட்டுநகர் மறைக்கல்வி நிலையங்களினால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அவர்களின் நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு இந் நிகழ்வில் கலந்துகொண்டதற்கு ஒரு சபாஷ்.

அருட்சகோதரி ரஞ்சி போல்துரை
தேசிய மறைக் கல்வி நடுநிலையம் .
கொழும்பு.

## அதி.வந்.லூர்துசாமி ஆண்டகை இறையடி சேர்ந்தார்

முதல் தமிழ் கர்தினால் என்னும் பெருமையும் முழு உலகின் முதலாவது தமிழ் கர்தினாலாகவும் விளங்கிய அதி.வந்.லூர்துசாமி ஆண்டகை தனது 90வது வயதில் உரோமில் காலமாகினார்



மேன்மைமிகு ஆண்டகை அவர்கள் புதுச்சேரி மறைமாவட்டத்தின் கல்லேரி கிராமத்திலே 1924ம் ஆண்டு பிறந்தவர். 1985ம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார்.

வாழும் காலத்திலே இறைவனுக்கேற்ற நிலைகளில் வாழ்ந்து சிறந்த பணியாற்றி மறைந்துவிட்ட அதி.வந்.லூர்துசாமி ஆண்டகையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமைகள் தொடர்கின்றன

*சிறுகதை*

இரண்டொரு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து கொண்டிருந்த மழை சற்று ஓயத் தொடங்கிவிட்டது மழை ஓய்ந்து விட்டாலும் ஒன்றோடொன்று ஒட்டினாற்போன்றிருந்த தகரக் கொட்டிலுக்குள் சேறும் சகதியும் குறையாமல் நிறைந்து கரைந்த வண்ணமாய் இருந்தன.

சாதாரண வீடுகளென்றால் இப்படி இருக்காது இது ஒரு அகதி முகாம். எப்படியோ வாழ்ந்த மக்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சரிந்து விட்ட வாழ்விடம் தான், இந்த முகாம்மக்களை மீள்குடியேற்றம் செய்வோம். சொந்த மண்ணிலே குடியேற்றுவோம் என்றெல்லாம் வெறும் செய்திகளாக மட்டும் வெளியிடுவார்கள். முகாம்களோ வறுமைகளோ மறைந்த பாடாகவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து ஊருக்குள் நுழைய முடியாமல் முகாமுக்குள் முடங்கிக் கொண்டவன் வசந்தன். அம்மா அப்பா சகோதரிகளை இருபது வருடங்களுக்குப் பிறகு காண்கின்றான். ஒரு அக்கா ஒரு தங்கை இருவரும் திருமணமாகி இருவருக்கும் ஒவ்வொரு பிள்ளை. யுத்தக் குழுக்களுடன், வசந்தனுக்கு எவ்வித தொடர்புமில்லை. ஆனால் அந்த நேரத்திலே இருந்தால் ஆபத்து என்றே பயந்தே நாட்டைவிட்டு ஓடிய சிலரோடு இணைந்து கொண்டவன் அவன் போனது வீட்டிற்குக்கூடத் தெரியாது. வசந்தன் வந்த போது அவனது வீட்டுக்காரர்களால்கூட அவனை அடையாளம் காண முடியாமல் இருந்தது. வசந்தனுக்கும் அப்படியேதான் அவனுடைய உறவுகள் அயல் வீட்டார்கள் தெரிந்தவர்களென்று பலரும் முகாமுக்குள் முடங்கிக் கிடந்தார்கள். அவனுக்கும் அவர்களை அடையாளம் காண்பதில் கடினமாகவே இருந்தது. வசந்தன் அம்மா அப்பா சகோதரிகளுக்கு வசந்தனைக் கண்டதில் இருந்து மகிழ்ச்சியைச் சொல்லவே முடியாது. மகனைப் பற்றிய செய்தி எதுவுமே இல்லாமல் அவன் இருக்கின்றானா? இல்லையா? எங்கே இருக்கிறான் என்று எதுவுமே தெரியாமல் இருந்த போது வசந்தன் திடீரென வந்திறங்கியது எல்லோருக்கும் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது.

எப்படி எப்படியோ பார்த்தவர்கள் இப்போது முகாம்களுக்குள் முடங்கிக்கிடப்பதும், வீடுவாசல் உறவுகளெல்லாமே சிதறிக்கிடக்கும் பரிதாபத்தைப் பார்க்கும் போது வசந்தனால் அழுகையை அடக்கமுடியாமலிருந்தது.

நாட்டின் அன்றைய சூழலிலே தப்பி ஓடினால் போதும் என்னும் நிலையிலே இந்தியாவுக்கு போனவர்களுடன் வசந்தனும் இணைந்து கொண்டவன். இப்போது வசந்தனுக்கு வயது நாற்பது. எப்படியோ இந்தியாவில் காலத்தைக் கடத்திவிட்டான் திருமணத்தில் அதிக ஈடுபாடில்லை.

வசந்தன் முகாமுக்குள் வந்து ஒருவாரம் கழிந்து விட்டது. அந்த ஒரு வாரத்திற்குள் இராணுவம், பொலிஸ் என்று பல முறைகள் வந்து விசாரித்துச் செல்வார்கள். வீட்டுக்காரருக்குப் பயந்தான். என்ன செய்வது.

முகாமுக்கு முன்பாக எல்லோரும் ஒன்றாகக்கூடிஇருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு வாகனம் வந்து நின்றது. முகத்தை எல்லாம் மறைத்துக் கட்டிக் கொண்டு துப்பாக்கியோடு மூன்று நான்கு பேர் ஓடிவந்தார்கள். வசந்தனுக்கு அருகில் வந்து நின்று கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்து சைகையால் ஏதோ காட்டிக் கொண்டவர்கள் திடீரென்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வாகனத்தில் ஏற்ற நொடிப் பொழுதில் வாகனம் மறைந்து விட்டது. அம்மா,அப்பா,சகோதரங்கள் உறவுகளெல்லாம் வாய்விட்டு அழுது கொண்டோடிய போதும் எதுவுமே பலனளிக்கவில்லை.

அன்று இரவு முழுவதும் வீட்டிலே அழுகையாகவே இருந்தது. அதிகாலை விடிந்து கொண்டிருந்த போது இருவர் ஓடிவருகின்றார்கள். "வசந்தனைக் கொண்டு போட்டாங்க, சவம் சந்தியிலகிடக்குது" அழாக்குறையாக கூறுகிறார்கள். அவர்கள் சொல்லும் போது அம்மா,அப்பா,சகோதரிகள் உறவுகளென்று எல்லாமே தலைகளில் அடித்துக் கொண்டு அழுது கொண்டே ஓடுகிறார்கள்.

வாழ்க்கையிலே துன்ப நிலைகள் பலவற்றையும் கடந்து உறவுகளைக் காணவென இருபது வருடங்கள் கடந்து வந்த போது முடிவு இப்படிப் போய்விட்டது.

வானொலியிலே செய்தி போகின்றது, அதில் இப்படியும் ஒருசெய்தி "இனந்தெரியாத ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை. இறந்தவர் பயங்கரவாத குழுவுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறன்து" இப்படியாகப் போய்க் கொண்டிருந்தது.

நாட்டிலே வாழ்ந்தால் பயங்கரமென்று நாட்டைவிட்டு ஓடி இருபது வருடங்கள் கழிந்து வந்த போது முடிவு இப்படியாகிவிட்டது. அதுவும் பயங்கரவாதி என்னும் புதுப்பெயருடன் வசந்தனின் உடல் இரத்த வெள்ளத்திலே கிடக்க அழுகையின் அவலக் குரல்கள் வான்நோக்கி எழுந்து கொண்டிருந்தன.

(கற்பனையே)

அருட்பணி.N.C.அருள்வரதன்

## வரவேற்பும் – நன்றி கூறலும்

மறைமாவட்ட PMS இயக்குனராக அருட்பணி.க.நித்தாசன் அடிகளார் 2009 ஜீன் மதம் 2014 ஜனவரி வரை 4 1/2 வருடங்கள் பணியாற்றி, தற்போது புதிய இயக்குனராக பொறுப்பேற்கும் அருட்பணி.S.சுகுணேந்திரன் குரூஸ் அடிகளாரின் கையில்பொறுப்பு கொடுக்கும் அருட்பணி க. நித்தாசன் அடிகளாருக்கு மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

அத்தோடு அவரின் சேவை எம் மறைமாவட்டத்தில் தொடர்ந்து வளர வாழ்த்துகின்றோம். புதிய இயக்குனரின் பணி வளர மறைமாவட்ட திருச்சபையோடு இணைந்து வாழ்த்தி வரவேற்கின்றோம்.



செல்வி S.சஞ்சா
செயலாளர்
P.M.S.
திருகோணமலை.

## ஜீவகாருண்யம்

இது மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் வாழ்க்கையிலும் இருக்க வேண்டிய சிறந்த பண்பாகும். தற்போதைய காலத்தில் அநேக மனிதனுக்கு இந்த ஜீவகாருண்யம் என்றால் என்னவென்று தெரியாத ஜடங்களாக வாழ்கின்றனர். எமது வீட்டில் கிராமத்தில் நகரத்தில் ஏன் இந்த நாட்டிலே கூட சில வேளை சிலருக்கு ஜீவகாருண்யம் மருந்துக்கு கூட இல்லாமல் உள்ளது. அண்மையில் யுத்தமென்ற போர்வையில் கொள்ளை,கொலை, பாலியல் துஸ்பிரயோகம், என்று பல ஒழுக்கற்ற செயல்கள் நம்மைக் கடந்து சென்றன. இன்றும் கடந்து செல்கின்றன. மனிதனை மனிதன் மதிக்கத்தெரியாத இன்றைய கால கட்டத்தில் மனிதனை மிருகத்தனமாக நோக்குகின்ற இன்றைய காலச் சூழலில் ,மிருகங்களின் தலைவனும் காட்டுக்கு ராஜாவானசிங்கம் தனது ஜீவ காருண்யத்தை எவ்விதமாக காட்டிச் சென்றது என்பதைப் பார்ப்போம். சிங்கம் ஒன்று தனது பசியைப் போக்க உணவைத் தேடி அலைந்தது. அருகில் சில மிருகம் நீர் அருந்துவதைக் கண்ட சிங்கம் செய்வதறியாமலும் பசிக் கொடுமையிலும் அந்த இடத்திற்கு பாய்ந்தோடியது. அங்கே மான்கள் தாகம் தீர நீர் அருந்திக் கொண்டிருந்தன. பாய்ந்து வந்த சிங்கம் ஒரு மானைப் பிடித்துக் கடித்துக் குதறியது. ஏனைய மான்கள் பயந்து ஓடின. சிங்கத்தின் வாயில்இருந்த மான் வயிறு கிழிந்த நிலையில் கீழே கிடந்தது. மானின் கிழிந்த வயிற்றில் இருந்து மான்குட்டி துடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட சிங்கம் செய்வதறியாமல் ஓடிச்சென்று மான் கூட்டத்தைக் கண்டு கர்ச்சித்து உதவி கோரியது. மான் கூட்டம் பயத்தில் அவ்விடத்தை விட்டு அகன்று போயின. சிங்கமோ மான் குட்டி இறந்த இடத்திலே ஊண் உறக்கமின்றி சோர்ந்து அப்படியே இறந்து விட்டது. இப்படிப்பட்ட கொடிய மிருகத்திற்கு உள்ள ஜீவ காருண்யம் எமக்கு இருக்கிறதா?
இது DISCOVERY CHANNELல் சென்ற மாதம் ஒலி, ஒளிபரப்பான உண்மைச் சம்பவமாகும்.

ஆக்கம்
திரு.செ.அந்தோனிப்பிள்ளை

## தூயவர்களின் வரிசையில்

### தூய கார்மேல் அன்னை

இவ்விழாவானது தூய கார்மேல் சபையினரின் அதிமுக்கியவிழாவாகும். கார்மேல் சபையினர் இந்தப் பெயரைத் தெரிந்து கொள்ள முக்கியமான ஒரு காரணம் உண்டு. கார்மேல் மலையிலே தூய கன்னி மரியாளுக்குத் தோத்திரமாக முதல் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது. அன்னை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் முன்னரே அந்த ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.
யூலை 16ம் நாள் கார்மேல் உத்தரியத் திருவிழாவாகும். 16.07.1251ல் கார்மேல் சபையின் பெரிய தலைவரான தூய சீமோன் ஸ்தோக் என்பவருக்கு இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிஜ் எனும் இடத்தில் தேவதாய் காட்சி கொடுத்தாள் என பரம்பரை கூறுகிறது. நம் பரலோக அன்னை உத்தரியத்தை காண்பித்தால் அந்த உத்தரியத்தை அணிந்திருக்கும் அனைவருக்கும் பரலோக கொடைகளையும் தனது பாதுகாப்பையும் அளிப்பாதாக அன்னை உறுதி கூறினாள். வெறுமனே உத்தரியத்தை அணிந்தால் போதாது உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும். உத்தரியத்தை மக்களுக்கு அளிக்க அதிகாரம் பெற்ற ஒரு குரு உத்தரியத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

## திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை

### நிதி சேகரிப்பு

| பங்கு | தொகை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) பாலையூற்று | 28995.00 | 730 |
| 2) பேராலயம் | 8500.00 | 496 |
| 3) உவர்மலை | 8000.00 | 325 |
| 4) குவாடலுப்பே | 5550.00 | 300 |
| 5) அலஸ்தோட்டம் | 4000.00 | 150 |
| 6) சாம்பல் தீவு | 3000.00 | 120 |
| 7) தம்பலகாமம் | 2217.00 | 30 |
| 8) நிலாவெளி | 2000.00 | 225 |
| 9) சீனக்குடா | 2000.00 | 150 |
| 10)மூதூர் | 1200.00 | 120 |
| 11)கன்னியா | 800.00 | 30 |
| 12)கந்தளாய் | 560.00 | 52 |
| 13)இருதயபுரம் | | 200 |
| மொத்தம் | 66[illegible]82.00 | |

## இயேசு சபை பற்றிய சிறிய கண்ணோட்டம்

ஸ்தாபித்தவர் : தூய லொயோலா இஞ்ஞாசியார்
ஆண்டு : 1540
இடம் : ஸ்பெயின்
திருவிழா : யூலை 31

### இலங்கையில்

* மாகாண முதல்வர் :அருட்பணி ஜெயராஜ் இராசையா இ.ச
* தலைமையகம்: நீர் கொழும்பு
* குருக்களின் எண்ணிக்கை: 77
  01. குருமட மாணவர்கள் - 25
  02. அருட்சகோதரர்கள் - 06
  03. நவசன்னியாசிகள் - 16
* பணியாற்றும் மறைமாவட்டங்கள்:
  திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி, காலி, மன்னார், இரத்தினபுரி, யாழ்ப்பாணம்.
* பணிகள் : ஆன்மீகப் பயிற்சிகள் ,கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் , தியான இல்லங்கள், சமூகசேவை, அகதிகள் பராமரிப்பு,பல்சமய உரையாடல்

விருது வாக்கியம் : 'கடவுளின் அதிமிக மகிமைக்காக' என்பதே

சிந்தனை: காரியங்கள் எவ்வளவு நம்பிக்கையற்றவையாகத் தோன்றுமோ அவ்வளவு அதிகமாக கடவுள் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். மனித உதவி நம்மைக் கைவிடும் போது கடவுளது உதவி நமக்கு அண்மையில் இருக்கிறது

## கருணை இல்லம்



அவளோ ஒரு விதவை
ஆனாலும் அவளுக்கு பெருமை
ஏன் என்றால் அவள்
பெற்றதோ ஆண்மகவை

தோட்டத்தில் பயிர் வளர்த்தாள்
லாபமும் நிறைவாய்ப் பெற்றாள்
பாராட்டி சீராட்டி வளர்த்தாள்
தன் அன்பு மகனை

சட்டம் படிக்க ஆசைப்பட்டான்
அவளும் விற்றாள் தன் தோட்டத்தை
பட்டமும் பெற்றான் தனையன்
ஆனந்தம் அடைந்தாள் அன்னையவள்

துணைபுரிவான் என்று காத்து நின்றாள்
அன்னை
துணைவியுடன் வந்து நின்றான்
பிள்ளையவன்
பாசம் காட்டிய தாயை விட்டு
வேசம் போட்டு ஓடிவிட்டான் பட்டணம்

மலையாய் நம்பியவன் சென்றதால்
சிலையாய் சரிந்தாள் தரையில்
அன்போடு கரம் பிடித்து அரவணைத்னர்
'கருணை இல்ல' கன்னியர் கூட்டம்.

ஆக்கம்:
திருமதி பி.நளினா
செல்வநாயக புரம்.

## குட்டிக் கதை ஒன்று......

இரண்டு நண்பர்கள் வீதியால் சுவாரசியமாகக் கதைத்துக் கொண்டு செல்கிறார்கள். நடந்து செல்லும் போது இருவரில் ஒருவர் மண்ணைத் தொடும் வண்ணம் குனிகிறார். அவர் குனியும் போது மற்றவர் கேட்கிறார். 'எவ்வளவுடா மச்சான்' என்று. அதற்கு குனிந்தவன் சொல்கிறார் 'என்னடா மச்சான் எண்டு கேட்காம எவ்வளவுடா மச்சான் எண்டு கேட்கிறியே'......

விளங்கியதா... சிந்திப்போம்...
– Fr.NC –

## ஓர் வேண்டுகோள்

கரை காணா கப்பலுக்கு
கலங்கரை விளக்காய் நின்று கரை சேர்த்த
கருணைத் தாயே – உம்மிடம் ஓர் வேண்டுகோள்
கப்பலில் சென்ற மகனை
காணாது பரிதவிக்கின்றோம்
தேடித் தருவாயோ
தேவனின் தாயே
தீப வாசகர்களே – உங்களிடமும் ஓர்
வேண்டுகோள்
நேரம் இருப்பின் – ஒருசில நிமிடங்கள்
மகனுக்காய் மன்றாடுமாறு மனமுருகி
வேண்டுகின்றோம்.

ஆக்கம்
திருமதி பிலிப்.நளினா
செல்வநாயக புரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை மறைமாவட்ட

## விவிலிய அறிவு எழுத்துப் போட்டி-முடிவுகள்



### தரம் 04,05,06

- 1ம் இடம் பாலையூற்றுப் பங்கு 360 புள்ளிகள்
- 2ம் இடம் இருதயபுரம் பங்கு 350 புள்ளிகள்
- 3ம் இடம் உவர்மலை (இலிங்கநகர்), நிலாவெளிப் பங்கு 344 புள்ளிகள்

### தரம் 07 ,0 8, 09

- 1ம் இடம் உவர்மலை (இலிங்கநகர்) பங்கு 422 புள்ளிகள்
- 2ம் இடம் நிலாவெளிப் பங்கு 398 புள்ளிகள்
- 3ம் இடம் , பாலையூற்றுப் பங்கு 376 புள்ளிகள்



### தரம் 10, 11, 12

- 1ம் இடம் பாலையூற்றுப் பங்கு 346 புள்ளிகள்
- 2ம் இடம் நிலாவெளிப் பங்கு 342 புள்ளிகள்
- 3ம் இடம் , பேராலயப் பங்கு 326 புள்ளிகள்

## மனித மாண்பும், குடும்பமும் ஆண்டை முன்னிட்டு தேசிய மறைக்கல்வி தினம்(28.09.2014)சிறப்புப் போட்டி

**திருகோணமலை மறைமாவட்டத்தால் தேசிய மறைக்கல்வி வாரத்தை முன்னிட்டு திருகோணமலை திருமறைக்கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் சிறப்புப் போட்டி.**

**இப்போட்டி : மறைக்கல்வி மனவர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு நடாத்தப்படுகின்றது.**

**சிறப்புப் போட்டிகள் வருமாறு:**

### 01.சித்திரபோட்டி



**தரம் :** பாலர், தரம் 1-5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்கள்

**தலைப்பு :**
1. 'பாவமும் தீமைகளும்'
2. 'இயற்கை அழகு'
3. 'ஆதிப்பெற்றோரும் பாவமும்'

**அளவு :** பிறிஸ்ரல் போட்டில் வரைய வேண்டும். சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும்.

### 02. கட்டுரைப் போட்டி

**தரம் :** 6- 9 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்கள்

**தலைப்பு**
1. 'ஆன்மீக வளங்களான குடும்பங்கள்'
2. 'உருவாக்கலின் அடித்தளம் குடும்பங்களே'

800 சொற்களுக்குள் குறையாமல் இருக்க வேண்டும்.திருவிவிலியம், மற்றும் திருச்சபை போதனைகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

### 03.சிறுகதைப் போட்டி

**தரம் :** 10 – 13 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்கள்

**தலைப்பு :**
1. 'உறவுகள் மறைவதில்லை'
2. 'பட்டமரம்'

800 சொற்களுக்குள் குறையாமல் இருக்க வேண்டும்.

திருவிவிலியம், திருச்சபை போதனை, தற்கால சூழல் போன்றவற்றை முன்வைக்கலாம்

### 04. கவிதைப் போட்டி

பயிலுனர் ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள்.

**தலைப்பு :**
1. 'உறவுகளை மறவாதே'
2. 'மரங்களைக் கொண்டே கனிகளை அறிவோம்'
3. 'உறவுகள் மறைந்து போனால்'

25 வரிகளில் கவிதை அமைதல் வேண்டும்.

மரபுக் கவிதையாகவோ, அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம்.


### நிபந்தனைகள் :

1. இது திருகோணமலை மறைமாவட்டத்திற்குட்பட்ட பங்குகளுக்கு மட்டுபடுத்தப்பட்ட போட்டியாகும்.
2. ஒருவர் ஏதாவது ஒரு தலைப்பிலும், போட்டியிலும் மட்டுமே பங்குபற்றலாம்.
3. மறையாசிரியர்கள், பயிலுனர் ஆசிரியர்கள் இவ் வருட (2014) பட்டியலில் பதியப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
4. வுள்ஸ்காப் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட வேண்டும். கையெழுத்தாகவும், கணணி Type செய்தும் அனுப்பலாம்.
5. தழுவல் மற்றும் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
6. ஒவ்வொரு போட்டியிலும் (1,2,3) என மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் முறையே 1000/=,750/=,500/= ரூபா என பரிசு வழங்கப்படும்.
7. ஆக்கங்கள் ஒவ்வொன்றிலும் பங்குத்தந்தை உறுதிப்படுத்த வேண்டும்.
8. பெயர், முகவரி, பங்கு, தரம் தெளிவாக எழுதி ஆக்கங்களுடன் இணைத்து அனுப்பவும்.
9. முடிவுத் திகதி 15.08.2014
10. 1,2,3ம் இடங்களைப் பெறும் ஆக்கங்கள் திருமலைத் தீபத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

தேசிய மறைக்கல்வி தின சிறப்புப் போட்டி
ஆசிரியர்
திருமலைத் தீபம்
திருமறைக்கல்வி நடு நிலையம்,
297,டொக்கியாட் வீதி,
திருகோணமலை.

## திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்றுகூடல்



12.05.2014 அன்று சாம்பல்தீவு தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் பாலர் சபை ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்றுகூடல் இயக்குனரின் மேற்பார்வையிலும், சாம்பல் தீவு பங்குத்தந்தையின் ஆசியுடனும் சுமார் 9.00 மணியளவில் சாம்பல் தீவு ஊக்குவிப்பாளர்களின் செபத்துடன் ஆரம்பமானது. அந் நிகழ்வை பழைய ஊக்குவிப்பாளர்களான திரு.ஏ.ஏ.பாக்கியநாதன் குரூஸ், திருமதி.டெ.ச.பிரசாந்தி ஆகியோர் செயற்படுத்தினார்கள். இதில் பாலர்சபை ஊக்குவிப்பாளர்களின் கடமை என்ன?, சின்னம் பெறுவது எவ்வாறு?, சிறார்களை வழிநடத்துவது எவ்வாறு?, சின்னத்தில் உள்ள சிறப்புக்கள் என்ன? என்பது பற்றி புதிய,பழைய ஊக்குவிப்பாளர்களுக்கு கூறப்பட்டு விளையாட்டுக்களும் நடைபெற்றன, இந் நிகழ்வில் சுமார் 20 ஊக்குவிப்பாளர்கள் கலந்த கொண்டனர். மதிய உணவுடன் சுமார் 2.00மணியளவில் ஒன்றுகூடலானது முடிவுற்றது. பின்பு எமது மாதாந்த கூட்டம் நடைபெற்று இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

செயலாளராக : திருமதி.B.I.மெடோனா குரூஸ் - குவாடலுப்பே பங்கு

உப செயலாளர் : செல்வி.த.சகாயதர்சிக்கா - பாலையூற்று (அன்புவழிபுரம்)

பொருளாளர் : செல்வி. மொனிக்கா -நிலாவெளிப் பங்கு

போன்றோர் தெரிவு செய்யப்பட்டு பின்னர் சுமார் 4.00 மணியளவில் சிலுவைமலை ஊக்குவிப்பாளர்களின் நன்றி செபத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

தகவல்
திருமதி.B.Iமெடோனா குரூஸ்
செயளாளர் திருப்பாலத்துவ சபை

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்

### கட்டண விபரம்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் – 2500.00 ரூபா |
| | 1/2 பக்கம் – 5000.00 ரூபா |
| கலர் | 1/4பக்கம் – 3750.00 ரூபா |
| | 1/2 பக்கம் – 7500.00 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகமம் பிறந்த கதை

குருத்துவப் பாதையில் கால் பதித்த காலம் தொட்டே, எனக்கு இறைவார்த்தையின் மேல் புதியதொரு ஆர்வமும் ஓர் இனம் புரியாத தாகமும் ஏற்பட்டது. இதனாலோ என்னவோ வேதாகமத்தின் பரிசுத்த பகுதிகளை (Sacra Pagina) வாசிக்கும் போதெல்லாம் எனக்குள் பல நூறு கேள்விகள் எழுந்த வண்ணமே இருக்கும்.

ஏன் கத்தோலிக்கர்களின் வேதாகமத்தில் 73 புத்தகங்களும் (புதிய ஏற்பாடு 27, பழைய ஏற்பாடு 46) சகோதர சபையார்களின் *(PROTESTANTS)* வேதாகமத்தில் 66 புத்தகங்களும் (புதிய ஏற்பாடு 27, பழைய ஏற்பாடு 39) மற்றும் கீழத்தேய பழமை வாத கிறிஸ்தவர்களின் வேதாகமத்தில் *(Eastern Orthodox Bible)* 77 புத்தகங்களும் (புதிய ஏற்பாடு 27, பழைய ஏற்பாடு 50) இருக்கின்றன என்கின்ற அடிப்படை கேள்விகள் சில எனக்குள் அடிக்கடி தோன்றும்.

ஏன் சில புத்தகங்களை கத்தோலிக்கர்களின் வேதாகமம் சேர்த்துக் கொண்டுள்ளது? ஏன் சிலவற்றை சேர்த்துக் கொள்ளவில்லை? யார் இதை தீர்மானித்தவர்கள்? எதன் அடிப்படையில் சேர்த்துக் கொண்டார்கள் அல்லது விட்டுவிட்டார்கள் என்றெல்லாம் என்னைப் போல உங்களிலும் பலர் சிந்திக்கலாம்.

இப்படியான சிலமாற்றங்களை கொண்டிருக்கும் இந்தப் பரிசுத்த வேதாகமத்தில், இறைவனின் வெளிப்பாட்டையும் (Revelation) திருவுளத்தையும் (will of God) எங்கே எப்படி கண்டுகொள்வது?

இந்த மாற்றங்களுக்கான அடிப்படை இறையியல் அல்லது வரலாற்றுக் காரணங்கள் என்ன என்பதை எதிர்வரும் தொடர் பகுதிகளில் விரிவாக உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறோம். அதனோடு கூட முக்கியமாக கத்தோலிக்கர்களாகிய நாம் பயன்படுத்தும் 73 புத்தகங்களை உள்ளடக்கிய வேதாகமம் இன்றைய நாள் வரைக்கும் என்னென்ன மாற்றங்களுக்குள்ளாக சென்றுள்ளது என்பதனையும் எதிர்வரும் தொடர்களில் காணலாம் நாம் எழுப்பும் வினாக்கள் இலகுவாகத் தோன்றினாலும் அதற்கான விடைகள் சற்று கடினமானதாகவே இருக்கும்.எனவே இக் கேள்விகளை இஸ்ராயேல் சமூகத்தின் விசுவாசத்தின் பின்னனியில் ஆராய்ந்து பார்த்து நமது விசுவாசத்தின் பயணத்திற்கு அத்திவாரமாக அமைந்தள்ளது பரிசுத்த வேதாகமத்தை ஆழமாக கற்றுக் கொள்வோம்.

நம்மில் பலர் வாசிப்பதுமில்லை –
யோசிப்பதுமில்லை
நாம் வேதாகமத்தை தினமும் வாசிப்போம்,
யோசிப்போம்,
விசுவசிப்போம்!!!!

அருட்பணி.போல் றொபின்சன்

தொடரும்........

## திருகோணமலை மறைமாவிலச் செய்திகள்

### 01. திருமலை மறைமாவட்டத்தில் நடைபெறவிருக்கும் வருடாந்த செயற்பாடுகள்

1) பெந்தகோஸ்து திருவிழிப்பு ஆராதனை 07.06.2014 பாலையூற்று திருத்தலம்.
2) திருவருகைக்கால நற்செய்தி ஆராதனை 06.12.2014 குழந்தை யேசு உவர்மலை ஆலயம்.
3) மறைமாவட்ட நத்தார் ஒளிவிழா 13.12.2014 பேராலயம்
4) கடற்கரையோர கரோல் நிகழ்ச்சி 21.12.2014 திருமலை நகர கடற்கரை

### 02.

புனித மரியாள் பேராலயத்தில் கடந்த மே மாதம் 2014. 23,24,25ம் திகதிகளில் பிரபல இறைப்பணியாளர் V.N.கிஷோக் அவர்கள் துதிப்பலியுடன் இணைந்த விவிலிய ஆராதனையை சிறப்பாக ஆன்மீக ரீதியில் வழிநடத்தினார்.

### 03. தூய ஆவி பெருவிழாவிற்கான திருவிழிப்பு

எமது மறைமாவட்டத்தின் யாத்திரைத் ஸ்தலமான பாலையூற்ற தூய லூர்த்து அன்னை ஆலயத்தில் தூய ஆவிப் பெருவிழாவிற்கு ஆயத்தமாக கடந்த 07.06.2014ல் மாலை 6.00 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணி வரை திருவிழிப்பு நடைபெற்றது. இதனை எமது அதி.வந் ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அருட்பணியாளர்களான யூட்சர்வானந்தன், மதராங்கன் குரூஸ், போல் றொபின்சன் அவர்களால் துதிப்பலியுடன் கூடிய வழிபாடும் நடைபெற்று திருப்பலியுடன் இனிதே முடிவுற்றது. பங்குகளில் உள்ள குருக்களும் கலந்து கொண்டனர்.

### 04.

தூய மரியாள் பேராலயத்தில் தூய ஆவிப்பெருவிழா ஒன்பது நாட்கள் சிறப்பிக்கப்பட்டன. இந் நவ நாட்களை ஒவ்வொரு அருட்பணியாளர்கள் சிறப்பித்தனர். 08.06.2014 அன்று தூய ஆவிப் பொருவிழா திருப்பலி ஆயரின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒபபுக்கொடுக்கப்பட்டது. மேலும் இப் பெருவிழா நிகழ்வுகளை அருங்கொடை இயக்க உறுப்பினர்கள் சிறப்பித்தனர்.

### 05. திருகோணமலை மறைமாவட்டத்தின் வருடாந்த மாபெரும் சிலுவைப்பாதையும் கல்வாரிப்பலியும் ~ 2014

திருகோணமலை மறைமாவட்டத்தின் இவ்வருட தவக்கால கல்வாரி பயண பாடுகளின் தியானம் [சிலுவைப்பாதை], சீனக்குடா பங்கிலுள்ள நாச்சிக்குடா சிலுவை மலையில் கடந்த சித்திரை மாதம் 5ம் திகதி காலை 8.30 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி .வந் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் மும்மத தலைவர்களால் குத்துவிளக்கேற்றி வைபவ ரீதியாக ஆரம்பமானது. இந் நிகழ்வில் சீனக்குடா அரச அதிகாரிகள், முப்படைத் தலைவர்கள், காவற்படை அதிகாரிகள் பலரும் ஆரம்ப நிகழ்வில் கலந்த சிறப்பித்தனர்.

இந் நிகழ்வை சிறப்பிக்கும் வண்ணம் திருகோணமலை மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து மக்கள் அலையென திரண்டிருந்தனர்.

சிலுவைப்பாதையின் தியான சிந்தனையான மனிதமாண்பும் வளமானகுடும்பமும் என்ற தலைப்பில் அருட் தந்தையர்கள் தமிழ், சிங்கள மொழிகளில் வழங்கினர்.

இந்நிகழ்வின் அச்சாரமாக 'சிலுவை மலை' சிகரத்தில் ஆயர் அதி .வந் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, அருட்பணி றி.கிங்ஸ்லி றொபட், அருட்பணி C.நோயல் இம்மனுவேல் திருமலை மறைமாவட்டத்தில் உள்ள குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

### 06. பாலையூற்று தூய லூர்த்து அன்னை திருத்தல திருவிழா

16.05.2014 அன்று மாலை 4.30 மணியளவில் செபமாலையுடன் கொடி ஏற்றம் ஆரம்பமானது. மறு நாள் சனி காலை அருட்பணி போல் றொபின்சன் அடிகளார் முதல் முறையாக நற்கருணை பெறும் மாணவர்களுக்கு முதல் நன்மையும் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டு மனித மாண்பும் குடும்பமும் என்பதற்கு அமைய நவ நாட்களிளும் அவ் தலைப்பின் கீழ் திருப்பலிகள் வெவ்வேறு அருட்பணியாளர்களினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியை மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. றி.கிங்ஸ்லி றொபட் அவர்களின் தலைமையில் ஒப்பக்கொடுக்கப்பட்டது. அன்றைய நாளில் பல பங்குகளிலும், வெளி மறைமாவட்டங்களில் இருந்து அன்னையின் பக்தர்கள் திருப்பலியில் பங்கேற்றார்கள். திருப்பலி முடிவில் அன்னையின் திருச்சுருவம் பவனிவந்து கொடியும் மகிழ்ச்சியுடன் இறக்கப்பட்டது. முடிவில் பங்கு தந்தை தலைமையில் உருவாக்கப்பட்ட "மனாசே" என்னும் இறுவெட்டு வெளியிடப்பட்டது.

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள்,கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் எதிர்பார்க்கின்றோம். அவற்றை திருமலைத் தீபத்திற்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியாட் வீதி,
திருகோணமலை.

குறிப்பு:

பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்வரத்தினம் கவிதைகளூடு விவிலியக் குறிப்புகள் ஒரு பார்வை

திருமதி.ஆன்யாழினி சதீஸ்வரன்
தமிழ்மொழி விரிவுரையாளர், பேராதனை பல்கலைக் கழகம்

'அவள் தனக்கு வரவிருப்பதை
நினைவில் கொள்ளவில்லை!
அவளது வீழ்ச்சி அதிர்ச்சியைத்
தருகிறது!
அவளைத் தேற்றுவார் யாருமில்லை'

கி.மு 586ல் ஜெருசலேமில் நிகழ்ந்த பேரழிவைக் குறித்த இறைவாக்கினர் எரேமியாவின் புலம்பல் இது கடந்த சில வருடங்களுக்கு முன்பதான எம் தேசத்தின் அழிவுக்கான புலம்பலாக பொருந்திப் போகிறது.

' யூப்பிரட்டீஸ் நதிக்கரையிலாகட்டும்
வேறெந்த நதிக்கரையிலாகட்டும்
-எல்லா இராணுவங்களும் ஒன்று
-எல்லா ஆயுதங்களும் ஒன்று தான்'

(பண்ணாமத்துக் கவிராயர், காற்றின் மௌனம் 1996)

மட்டுமல்ல, போரின் அழிவுகள் குறித்து பாடல்களும் ஒன்றுதான் என எண்ணத் தோன்றுகிறது. 80களுக்குப் பின் ஈழத்துக் கவிதை மரபிலே போரியல் கவிதைகள் எனும் புதிய வகுதியைத் தோற்றுவிக்கும் வண்ணம் போர் சார்ந்தும், அதனாலான வன்முறைகள் சார்ந்தும் எழுந்த கவிதைகளின் ஆக்ககாரர்களில் தனித்த கவனத்தைப் பெறுபவரான சு.வில்வரத்தினத்தின் கவிதைகள் பலவற்றைப்படிக்கும் போது அவற்றில் எரேமியாவின் புலம்பலின் சாயலை அடையாளம் காண முடிகிறது. கூடவே, விவிலியம் கூறும் பல விடயங்களையும் சொற்றொடர்களையும் அடையாளம் காண முடிகிறது.

அவரது **'காலசர்ப்பம்'** எனும் கவிதையில் வரும் கீழ்காணும் பகுதி, 'துயருற்றவளே , சூறைக்காற்றால் அலைக்கழிக்கப்பட்டவளே! ஆறுதல் பெறாது தவிப்பவளே' எனும் ஏசாயாவின் **(54:11)** வரிகளையும், அழிக்கப்பட்ட ஜெருசலேம் உட்பட்ட நகர்கள் குறித்த இறைவாக்கினர்களின் வரிகளையும் நினைவூட்டுகின்றது.

'புதைகுழி தேசமே!
யுத்தத்தின் தலைவாசலில் பிள்ளை குட்டிகளைப்
பந்தியமர்த்தி மரணத்தைப் பரிமாறுகின்றவளே
பொல்லாங்குகளின் மேலிட்ட சிம்மாசனமே'

இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் பல ஈழத்துக் கவிதைகளில் எடுத்தாளப்பட்டவை.

இயேசு ⟶ மீட்பர் / நல் மேய்ப்பர்
⟶ பிறர் பாவங்களைத் தீர்க்க வந்தவர்.

எனும் கருத்து நிலையை விட,

இயேசு ⟶ பாவஞ் செய்யாதவர்
⟶ துன்பவாதைகளை அனுபவித்தவர்.

எனும் கருத்து நிலையிலேயே அதிக கவிஞர்களால் நோக்கப்படுகிறார். இதே பண்பையே வில்வரத்தினத்தின் கவிதைகளிலும் காணமுடிகிறது. மீட்புக்கான இயேசுவின் சிலுவைப்பாடுகளை தாம் அனுபவித்த வாதைகளுக்கு நெருக்கமானவையாகக் கண்டு, தம்மை ஆறுதல் படுத்திக் கொள்வது மற்றைய தமிழ் மக்களைப் போலவே கவிஞருக்கும் இயல்பாயிருக்கிறது.

'முன்னொருகால்
சிலுவை தாங்கிய நாயகனின்
சுவடுகள் இன்னும் அழிந்துபடவில்லை.
சிலுவையின் கீழ் அவன்
சிந்திய குருதித்துளிகள்
என்றுமே காய்ந்திலது
இதோ
இன்னும் பச்சையாக
இன்றைக்கும் சத்தியமாய்'

(மீண்டும் உயிர்த்தல்)

இன்னும் ஒரு கவிதையில் தன்னையே சிலுவையாகக் காண்பார், கவிஞர் ' உயிர்த்தெழுதலுக்கான ஜபங்களுடன் நானொரு சிலுவை போவானேன்.... இது காயம்பட்ட சிலுவை, இயேசுவின் திருவுருவாகத் தன்னைப் பாவனை செய்த சிலுவை, 'தன்னைச் சூழ்ந்த தேசத்தினதும் உயிர்த்தெழுதலுக்காக, சிதறிய கூரைகளும், சிதைந்த குடில்களும், சாம்பர்ப் பிட்டியான தேசங்களும், அங்கங்கள் வெட்டுண்ட மரங்களுமாக இருந்த பாழும் சிலுவைக் காட்டிடையே தியானித்திருந்த தவக்காலச் சிலுவை.'

இன்னுமோரிடத்தில்,

'ஏன் என்னைக் கைவிட்டீர்' எனக் கதறிய ஒரு விண்ணோடிக்கான கவிஞரின் பதில் இங்ஙனம் அமைகிறது.

' ஒரு மீட்பரின் குரலையே குருதி கொட்டச்
சிலுவையில் அறைந்தவர் யுகம் இதிலே
எங்களின் கதறல் எதைச் சாதிக்கும்?'

(முடிவது எங்கு)

எவ்வாறு இயேசுவின் மரணம் தமிழினத்தின் வேதனைகளுக்கும் அழிவுக்கும் படிமமாகின்றதோ,அவ்வாறே அவரது உயிர்ப்பு மீளவும் எழுவோம் எனும் உறுதிக்கும் புதிய துளிர்ப்புக்கான நம்பிக்கைக்கும் படிமமாகி விடுகின்றது.

' கல்லறைகள் ஒரு நாட் பெயரும்
அன்று
புதைகுழி நீத்து எம் உணர்வுகள்
உயிர் பெறும்
எதிர்பார்த்திருக்க மாட்டீர்
எம் உயிர்த்தெழலை
உம் திகைப்புகள்
கல்லறையாய் மாற'
(மீண்டும் உயிர்த்தல்)

உயிர்த்தெழுதல் எனும் சொல்லாடலைத் தன் கவிதைகளில் வேறு பல இடங்களிலும் கையாண்டுள்ள கவிஞர் தன் ஒரு கவிதையின் தலைப்பாக உயிர்த்தெழும் காலத்திற்காக என்பதையும் நூலின் தலைப்பாக உயிர்தெழும் காலத்திற்காக என்பதையும் தந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது **(ஆனால் குறிப்பிட்ட கவிதை விவிலியக் கருத்துடையது அல்ல)** பாடுகள், உயிர்ப்புத் தாண்டி , மேலும் சில விவிலியம் சார் விடயங்களையும் வில்வரத்தினத்தின் கவிதைகள் பேசுகின்றன.

' நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்
ஏனெனில், விண்ணரசு அவர்களுக்குரியது'

எனும் இயேசுவின் மலைப்பிரசங்கத்தையும், **'அன்பு'** எனும் புதிய ஏற்பாட்டின் சாரத்தையும் நினைவு படுத்துவதாய் அமையும்.

' உனது பாத்திரத்தின் உள்ளே
ஒட்டிக் கொண்டிருக்கும்
அன்பின் அவிழ்பதம் கண்டாயா?
ஆயின் நீ பாக்கியசாலி
அன்பின் வறிய அயலான் ஒருவனுக்கு
அதை வழங்கு
ஒரு துளி நேசிப்பில் தொடங்குகிறது
அன்பின் இதழவிழல்'

(துளிமுகத்துள் கங்கை)

எனும் கவிதைப் பகுதியைச் சான்றாகக்காட்டலாம்.

மேலும், விபச்சாரம் செய்து பிடிப்பட்ட பெண்ணுக்குத் தண்டனையாகப் பலர்கூடிக் கல்லெறிய முனைந்த போது **'உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப் பெண் மேல் கல் எறியட்டும்'** என, இயேசு கூறிய சம்பவத்தோடு தொடர்பு பட்டதாய் எழுதப்பட்டள்ளது, **'காயம்'** எனும் கவிதை பாவஞ் செய்தோரின் கற்களே இன்று பலரின் குருதியை சிந்தச்செய்கின்றன எனச் சொல்லும் அக்கவிதை வருமாறு

' காயம் பட்டவனின்
குருதி கதறிற்று
கல் எங்கிருந்தது?
இயேசுவின் சொல்லிற்கு
கை நெகிழ்ந்தோர்
விட்டுச்சென்ற
குவியலில் இருந்து'

இங்ஙனம்,வில்வரத்தினம் எனும் ஈழத்தின் மிகப்பெரும் கவி ஆளுமையின் கவிதைகளினூடே, அடையாளங் காணக்கூடிய விவிலியக் குறிப்புகள் நிச்சயமற்ற இருப்புடைய ஓர் இனம், தன்னைப் போலவே பாடுகளையும், வேதனைகளையும், அனுபவித்த ஒரு வரலாற்று நாயகனைத் தமக்கு நெருக்கமானவனாக்கிக் கொண்டமைக்கான சான்றுகளாகவே திகழ்கின்றன எனலாம்.

## எகெட் கரித்தாஸ் பணியகத்தினூடாக பங்குகளிடமிருந்துபெறப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான தவக்கால ஒறுத்தல் சேமிப்புவிபரம்

| | | |
|---|---|---|
| 1. தூய லூர்துஅன்னைதிருத்தலம் | – பாலையூற்று | – 7,000.00 |
| 2. தூய அந்தோனியார் ஆலயம் | – சீனக்குடா | – 2,000.00 |
| 3. தூய சூசையப்பர் ஆலயம் | – நிலாவெளி | – 4,000.00 |
| 4. குழந்தைஇயேசுஆலயம் | – உவர்மலை | – 7,730.00 |
| 5. தூய குவாடலூர்ப்பேஅன்னைதிருத்தலம் | – சின்னக்கடை | – 27,660.00 |
| 6. தூய மரியாள் பேராலயம் | – பெரியகடை | – 8,000.00 |
| 7. தூய சதாசகாய அன்னை ஆலயம் | – கந்தளாய் | – 850.00 |
| 8. தூய அந்தோனியார் ஆலயம் | – மூதூர் | – 6,836.00 |
| 9. திருஇருதயஆண்டவர் ஆலயம் | – இருதயபுரம் | – 6,000.00 |
| 10. தூய திருமுழுக்குயோவான் ஆலயம் | – சாம்பல்தீவு | – 3,000.00 |
| 11. கிறிஸ்து அரசர் ஆலயம் | – கன்னியா | – 1,000.00 |
| 12. தூய ஆரோக்கிய அன்னை ஆலயம் | – தம்பலகாமம் | – 1,943.00 |
| 13. இறை இரக்கத் திருத்தலம் | – அலஸ்தோட்டம் | – 5,000.00 |
| 14. எகெட் கரித்தாஸ் பணியகம் | – திருகோணமலை | – 10,000.00 |

தகவல்
முகாமைத்துவம்
எகெட் கரித்தாஸ்
திருகோணமலை

## "பெரிய வெள்ளி" பங்குகளின் பங்களிப்பு

| | | |
|---|---|---|
| 01. பாலையூற்று | – | 39,170.00 |
| 02. பேராலயம் | – | 32,000.00 |
| 03. குவாடலூர்பே | – | 16,128.00 |
| 04. அலஸ்தோட்டம் | – | 12,500.00 |
| 05. நிலாவெளி | – | 8,500.00 |
| 06. மூதூர் | – | 6,300.00 |
| 07. சாம்பல்தீவு | – | 6,000.00 |
| 08. இருதயபுரம் | – | 6,000.00 |
| 09. சீனன்குடா | – | 4,027.00 |
| 10. கந்தளாவ | – | 3,580.00 |
| 11. தம்பலகாமம் | – | 1,560.00 |
| 12. கன்னியா | – | 1,000.00 |
| 13. உவர்மலை | – | 7,730.00 |
| மொத்த தொகை | – | 1,36,765.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் செய்திகள்

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிருந்து



- குழந்தைகளையும் முதியோர்களையும் கைவிடும் சமூகம், தன் ஆணிவேரையே அறுப்பதுடன், வருங்காலத்தையும் இருளாக்குகின்றது.
- மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவத்தின் விதையானது, அவர்களின் சாட்சியம் நம்பிக்கையை போதித்தது.
- மகிமை அடைய வேண்டுமெனில், சிரமங்கள் மற்றும் சிலுவை வழியே தான் செல்ல வேண்டும்.
- மனிதர்கள் சோகத்தில் இருக்கும்போது விவிலியத்தை வாசிப்பதும், ஞாயிறு திருப்பலியில் பங்கு கொள்வதும் அவசியம். ஏனெனில் இறைவார்த்தையும் திருநற்கருணையும் மகிழ்வைக் கொணர்கின்றன.
- மக்கள் நலனை மனதில் கொண்டு சமூக மற்றும் அரசியல் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் கத்தோலிக்கத் தலைவர்கள், கிறிஸ்தவ மதிப்பீடுகளை துணிச்சலுடன் எடுத்துரைப்பவர்களாக, நம்பிக்கையின் சாட்சிகளாகச் செயல்பட வேண்டும்.
- வெறும் புகழுக்காக நல்ல செய்திகளை ஆற்றுவோர், அதிகாரத்தின் மீது மோகம் கொண்டு அலைவோர், பணத்தின் மீது பேராசை கொண்டோர் என மூன்று விதமான செயல்பாடுகள் நம்மையே நாம் புனிதப்படுத்துவதிலிருந்து நம்மைத் தடுக்கின்றன.
- நற்செய்தி அறிவிப்பு என்றால் என்ன? நாம் யார், நம் நம்பிக்கை என்ன என்பதற்கும் மகிழ்வுடனும் எளிமையுடனும் சாட்சி பகர்வதே அது.
- இயேசுவோடு நிலைத்திருங்கள், அவரிடமிருந்து நம்பிக்கையைப் பெற்று தெருக்களுக்குச் சென்று பகிருங்கள். இறுதியாக இயேசுவில் இணைந்து மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள்.
- தோற்றத்தையும் தாண்டி மக்களின் அவலங்களைக் காணவல்ல கண்களையும்,மக்களின் அழுகுரலைச் செவிமடுக்கவல்ல காதுகளையும், அனைவருக்கும் நல்லதையே விரும்பும் இதயத்தையும் நமக்குத் தருமாறு இறைவனிடம் வேண்டுவோம்.
- இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஒப்புரவை ஊக்குவிப்பதிலும், மனித உரிமைகள் மதிக்கப்படுவதிலும் இனங்களிடையேயான பதட்ட நிலைகளை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் இன்னும் நிறைய ஆற்ற வேண்டியுள்ளது.
- பொருளாதாரக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் போது விளையாட்டுத் துறை மாசுபடுத்தப்பட்டுவிடும். விளையாட்டுத் துறையின் மாண்பு எப்போதும் காக்கப்பட வேண்டும்.
- தந்தையாம் இறைவனை விட பொறுமையுடையவர் எவருமில்லை அவர் அளவிற்கு புரிந்து கொள்பவரும், காத்திருக்கத் தெரிந்தவரும் எவருமில்லை.
- இயேசுவின் பெயரால் நம்பிக்கையாளர்கள் சிலுவையிலறையப்பட்டுக் கொல்லப்பட்ட செய்தியைப் படித்த போது நான் கண்ணீர் விட்டு அழுதேன்.
- அரசியல் பொறுப்பில் இருப்போர் இரு விடயங்களை மனதில் கொள்ள வேண்டும்.அவையாவன மனித மாண்பும், பொது நலனும்.
- 'நான் பாவியில்லை'என்று எவரும்கூற முடியாது,நம் பாவங்களுக்கான மன்னிப்பை இறைவனிடம் வேண்டுவோம்.
- எளிமை உள்ளம் கொண்டவர்களாக, தாழ்ச்சியுடையவர்களாக இருக்கும்போது அங்கு அதிகாரத்திற்கான போட்டியோ பொறாமையோ இல்லை.
- ஆதிகாலக் கிறிஸ்தவர்கள், ஒருவர் ஒருவரைப் பற்றி பொறாமை கொள்ளாமல், புறம்பேசாமல், பெயரைக் கெடுக்காமல் வாழ்ந்தமையால் அங்கு அமைதி நிலவியது.
- எதிர்மறை எண்ணங்கள் நிறைந்த இருளான பாதாளத்தில் விழுவதற்கு நம்மை நாமே அனுமதிக்கக் கூடாது. நம்பிக்கை மலைகளையும் பெயர்க்கும்.
- மணமுறிவு, கருக்கலைப்பு, கத்தோலிக்கர் பிற மதங்களை நாடிச் செல்லுதல் ஆகிய சவால்களைச் சந்திக்க, படைப்பாற்றல் மிக்க வழிகளை ஆயர்கள் தேட வேண்டும்.
- எளிமையான வாழ்வை மேற்கொள்வது நல்லது அதன் பயனாக, தேவையில் இருப்போருடன் நம்மிடமிருப்பதைப் பகிர்ந்தளிக்க முடியும்.
- இருளை நாடும் வௌவால்களைப் போல், இறைவனின் பிரசன்னம் என்ற ஒளியைத் தேடாமல், இருளின் சுகம் காணும் கிறிஸ்தவர்கள் உள்ளனர்.
- உடலாலும் மனதாலும் துன்புறும் அனைவருக்காகவும், குறிப்பாக, தங்கள் சிலுவைகளைத் தாங்களே சுமக்குமாறு கைவிடப்பட்ட அனைவருக்காகவும் மன்றாடுவோம்.
- இயேசுவை மிக நெருக்கமாகத் தொடர்வது எளிதல்ல ஏனெனில், அவர் தேர்ந்துள்ள பாதை, சிலுவைப் பாதை.
- இயேசு ஓர் அடிமையாக மாறி, தன் சீடர்களின் காலடிகளைக் கழுவியதைப் போல, நாமும் மற்றவர்களுக்குப் பணிவிடை புரிய அழைக்கப்பட்டுள்ளோம்.
- அருட்பணியாளர் பணிக்கென பயில்பவர்கள், ஒரு நிறுவனத்தின் அதிகாரத்திற்குரிய பணிக்கென தங்களைத் தயாரிக்கவில்லை. மாறாக, இயேசுவைப் போல் தன் மந்தையை மேய்க்கும் நல்லாயன் பணிக்கென தங்களை தயாரிக்கிறார்கள்.

## துணுக்குச் செய்திகள்

- 2012ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரையுள்ள புள்ளி விவரங்களின் படி, உலகில் 122 கோடியே 80 இலட்சம் கத்தோலிக்கர்கள் இருந்தனர். இது உலக மக்கள் தொகையில் 17.5 விழுக்காடாகும்.
- பல ஆண்டுகளாக நாத்திகம் பரப்பப்பட்டு வந்த மங்கோலியாவில் 1992ம் ஆண்டே வெளிநாட்டு மறைபோதகர்கள் நுழைய முடிந்துள்ள நிலையில், கடந்த 20 ஆண்டுகளில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்ந்துள்ளது.
- ஏழ்மையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான சிறந்த வழி, அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருவதேயாகும் என உரோம் கருத்தரங்கில் உரையாற்றினார் கர்தினால் பீட்டர் டாக்ஸன்.
- 2013ம் ஆண்டில் இறுதியில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி தற்போது, தென்கொரியாவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை 55 இலட்சத்தை எட்டியுள்ளது என்றும், இது கடந்த ஆண்டை விட 1.5 விழுக்காடு அதிகம் என்றும் அந்நாட்டு ஆயர் பேரவை அறிக்கை கூறுகிறது.
- உலகிலுள்ள புற்றுநோயாளிகளில் பாதிக்கும் மேற்பட்டோர், இந்தியா, சீனா, இரஷ்யா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர் என தலான் செண்ட் மருத்துவ இதழில் வெளியான ஆய்வறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.
- திருத்தந்தை 2ம் ஜோன் போல் புனிதராக அறிவிக்கப்பட்ட திருப்பலியில் கலந்து கொள்ள போலந்திலிருந்து உரோம் நகர் வரை இரண்டாயிரம் கிலோமீட்டர் தூரத்தை 22 பேர் ஓடியே கடந்து வந்தடைந்துள்ளனர்.
- சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தத்தை 2002ம் ஆண்டிலேயே ஏற்றுள்ள வத்திக்கான் நாடு, மனிதனின் மாண்பு எச்சுழலிலும் மதிக்கப்பட வேண்டும் என்பதை எப்போதும் தொடர்ந்து வலியுருத்தி வருகின்றது என்றார் பேராயர் சில்வானோ தொமாசி.
- ஒவ்வோர் ஆண்டும் உலகில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் மலேரியா நோய்க்குப் பலியாவதாகவும், இதில் 75 விழுக்காட்டினர் ஆபிரிக்க குழந்தைகள் எனவும் தெரிவிக்கிறது அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று.
- உலக ஆயுத வர்த்தகத்தில் முன்னணியில் நிற்கும் 15 நாடுகளுள் 8 நாடுகள் ஆசியாவைச் சேர்ந்த நாடுகள் என்று கூறும் உலக அமைதி ஆய்வு மையத்தின் அறிக்கை,முதல் பத்து நாடுகள் வரிசையில், சீனா, இரஷ்யா, சவூதி அரேபியா, ஜப்பான், இந்தியா போன்றவை இருப்பதாக தெரிவிக்கிறது.

### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் ~05 இன் விடுதலைப்பயண நூல் அதிகாரம் 1~10 வரை விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | 70 பேர் | (1:5) |
| 02. | சிப்போரா | (2:21) |
| 03. | 137 | (6:16) |
| 04. | கோசேன் | (9:26) |
| 05. | எபிரேய மருத்துவப் பெண்கள் | (1:15) |
| 06. | 80,83 | (7:7) |
| 07. | மிதியான் நாட்டிற்கு | (2:15) |
| 08. | எகிப்தியர் | (1:13) |
| 09. | நீரிலிருந்து எடுக்கப்பட்டவன் | (2:10) |
| 10. | ஆரோன் | (4:27) |
| 11. | அன்னியன் | (2:22) |
| 12. | இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே | (3:14) |
| 13. | அதிகாரம் 5, வசனம் 1 | |
| 14. | தவளைகள், கொசுக்கள், ஈக்கள் | |
| 15. | 8வது | (10ம் அதிகாரம்) |

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.
பங்குபற்றியவர்கள் – 55 பேர்
சரியான விடையளித்தோர் – 11 பேர்

அனுப்ப வேண்டிய முகவரி :
திருவிவிலிய புதிர்ப்போட்டி -06
திருமலைத்தீபம்
இல.297, டொக்கியாட் வீதி
திருகோணமலை



### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர்ப்போட்டி ~06
### விடுதலைப் பயணநூல் அதிகாரம் 11~20 வரை

இப் படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும்

01. எகிப்தில் இஸ்ராயேல் மக்கள் எவ்வளவு காலம் வாழ்ந்தனர்?
விடை:

02. இஸ்ராயேல் மக்கள் எங்கிருந்து எங்கு இடம் பெயர்ந்தனர்?
விடை:

03. ஏழாம் நாள் யாருடைய விழாவாக கொண்டாடப்பட வேண்டுமென்று மோசே கூறினார்?
விடை:

04. சீன் பாலைநிலம் எதற்கு இடையில் உள்ளது?
விடை:

05. ஆண்டவர் மோசேயிடம் மக்கள் தண்ணீர் பெற எந்தப் பாறை மீது அடி என்றார்?
விடை:

06. இஸ்ராயேல் மக்கள் எப்போது சீனாய் மலையை அடைந்தார்கள்?
விடை:

07. மோசே அமைத்த பலிப்பீடத்தின் பெயர் என்ன?
விடை:

08. இஸ்ராயேல் மக்களாகிய நீங்கள் எந்த மாதத்தில் வெளியேறி செல்கிறார்கள் என்று மோசே கூறினார்?
விடை:

09. இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து செல்லும் போது மோசே யாருடைய எலும்புகளைஎடுத்துச் சென்றார்?
விடை:

10. இஸ்ராயேல் மக்கள் எந்த நாட்டிற்குள் புகும் வரை மன்னா உணவை உண்டார்கள்?
விடை:

11. பாலைநிலத்தில் இஸ்ராயேலுக்கு வழங்கப்பட்ட உணவிற்கு என்ன பெயரிட்டனர்?
விடை:

12. ஆண்டவர் விழித்திருந்த இரவு எது?
விடை:

13. இறைவாக்கினர் ஆரோனின் தங்கையின் பெயர் என்ன?
விடை:

14. சாபத்து என்பதன் எபிரேயப் பொருள் என்ன?
விடை:

15. கடவுள் தந்த கட்டளைகள் குறிப்பிடும் அதிகாரம் எது?
விடை:

பெயர் :..........................................................
முகவரி :..........................................................
..........................................................
பங்கு : ..........................................................

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31.07.2014

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி ஏ.விமன்சியா
3ம் வட்டாரம்,
நிலாவெளி.
திருகோணமலை.

**2ம் பரிசு 300/=**
செல்வி.பிறின்சியா.அன்றாபோ
சென் மேரியன் ஹொஸ்டல்,
டொக்கியாட் வீதி,
திருகோணமலை.

**3ம் பரிசு 150/=**
செல்வன்.போ.பிரகாஷ் கிஷோர்பிரவீன்
இல:24/5கோணேச புரம்,
உவர்மலை,
திருகோணமலை



பாராட்டுக்குரியவர்கள்:~

- செல்வன். சு. எமில் ராஜ் இல: 48,நித்தியபுரி 3ம் கட்டை, திருகோணமலை.
- செல்வி. அ. தருசிமேரி இல : 66,யாட்அடைவீதி, திருகோணமலை.
- செல்வி. அ. தர்சனாமேரி இல: 66,யாட்அடைவீதி, திருகோணமலை.
- செல்வி. டயுடிலு யூடித்மரியா.செலஸ்ரின் றாகல் இல: 95/7, 1ம் குறுக்கு,சின்ன ஊறணி,மட்டக்களப்பு.
- செல்வன். சு.டிலுக்ஸ்ராஜ் இல: 48,நித்தியபுரி,திருகோணமலை.
- செல்வி. அ.மேரி டிலானி இல: 20,கோணேச புரம்,உவர்மலை, திருகோணமலை.
- செல்வன். ஆ.அபிஷயன் இல: 58/16,லோவர் ரோட்,உவர்மலை, திருகோணமலை.
- செல்வன். ஓ.சொய்ஸ் கிளின்டன் இல: 3ம் வட்டாரம்,நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித மரியாள் பேராலயத்தில் கடந்த 08.06.2014ல் நடைபெற்ற தூய ஆவிப் பெருவிழாவின்



## திருகோணமலை மறைமாவட்டத்தின் வருடாந்த மாபெரும் சிலுவைப்பாதையும் கல்வாரிப்பலியும் - 2014



## தூய ஆவி பெருவிழாவிற்கான திருவிழிப்பு



### பாலையூற்று தூய லூர்த்து அன்னை திருத்தல திருவிழா




புனித மரியாள் பேராலயத்தில் கடந்த 23,24,25ம் திகதிகளில் பிரபல இறைப்பணியாளர் V.N.கிஷோக் அவர்கள் துதிப்பலியுடன் இணைந்த விவிலிய ஆராதனையை சிறப்பாக ஆன்மீக ரீதியில் வழிநடத்தினார்.



## இறை இரக்கத் திருத்தலம் , அலஸ்தோட்டம், திருகோணமலை


என் அன்புக்குரிய இறைஇரக்க பக்தர்களே!

இறைஇரக்க திருத்தலத்தை கட்டிமுடிக்க உதவி புரிந்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். உங்கள் குடும்பங்களை இறைஇரக்க ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள்; அது எனக்கு உகந்ததாய் இருக்கும்; அங்கே நான் மாட்சியுடன் விளங்குவேன் என்று சொல்கிறார் ஆண்டவர். (ஆகாய் 1:8)

திருத்தலத்தின் முகப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

முகப்பின் முன் அமைப்பு



என் கடவுளாகிய ஆண்டவரின் பெயருக்குக் கோவில் எழுப்ப எண்ணியுள்ளேன், எனக்குத் தேவையாயிருக்கும் கேதுரு மரங்களை லெபனோனிலிருந்து வெட்டித்தருமாறு உம்பணியாளருக்குக் கட்டளையிடும் ( 1 அரசர்கள் 5:5-6 )

### அதற்கு தேவையான பொருட்கள் :

| | |
|---|---|
| இரும்புக் கம்பி | |
| 16mm | 96 Bar |
| 12mm | 260 Bar |
| 10mm | 260 Bar |
| 1/4'' கொயில் கம்பி | 300 kg |
| கட்டுக் கம்பி | 50 kg |
| ஆற்று மண் | 06 லொறி |
| 3/4'' கல் | 04 லொறி |
| 1'' கல் | 01 லொறி |
| சீமெந்து | 200 பக்கட் |







நலன் விரும்பிகள் நல் உள்ளங்கள் தாராள உதவிகளைச் செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
இறை இரக்க ஆண்டவரின் ஆசீர் உங்களோடு என்றும் இருப்பதாக.

தொடர்புகளுக்கு :
பங்குத்தந்தை R.திருச்செல்வம்
இறைஇரக்கத் திருத்தலம்
அலஸ்தோட்டம்
திருகோணமலை
T.P. 0774806320, 0262050205

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக(எபே 4:17)